# இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக



இறந்தவர் வீட்டில் குழுவாகச் செபிக்கக் கையேடு

# பொருளடக்கம்

இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 1 .......................................3

இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 2 .......................................9

இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 3 .....................................15

இறந்தோருக்கான மன்றாட்டு மாலை .......................................21

இறந்தோருக்கான அடக்கச் சடங்குகள் ..................................25

இறந்தோருக்கானப் பாடல்கள் ................................................31

# இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 1

**தொடக்கப் பாடல்** (பின்னால் இணைக்கப்பட்டுள்ளப் பாடலில் ஒன்றைப் பாடவும்)

**தொடக்கச் செபம்**

முத : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...

எல் : ஆமென்.

முத : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும், கடவுளுமானவர் போற்றப் பெறுவாராக. அவர் இரக்கம் நிறைந்தத் தந்தை, ஆறுதல் அனைத்துக்கும் ஊற்றானக் கடவுள். அவரே நமக்கு எல்லா வகையான துன்பத்திலும், துயரத்திலும், வேதனையிலும் ஆறுதல் அளித்து வருகிறார். இவ்வாறு, நாம் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆறுதலால் எத்தகைய வேதனையில் இருப்போருக்கும் நாமும் ஆறுதல் அளிக்க முடியும்.

எல் : ஆண்டவர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!

முத : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இறந்து போன ______________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் உற்றார் உறவினர்களே, நண்பர்களே, நம்மை விட்டுப் பிரிந்து, தன்னைப் படைத்தக் கடவுளிடம் திருப்பயணம் மேற்கொண்டிருக்கும் நம் ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்காக செபிக்க நாம் கூடியிருக்கிறோம். தனது உலக வாழ்வில் அவர் கொண்டிருந்த விசுவாசம், அவருக்குப் புனிதரின் கூட்டத்திலும் இடமளிக்கத் துணை புரிவதாக. 'ஆண்டவரிடம் பற்றுறுதி கொள். அவர் உனக்குத் துணை செய்வார். உன் வழிகளைச் சீர்படுத்து. அவரிடம் நம்பிக்கை கொள்' என்று சீராக் (2:6) நூல் கூறுவது போல, நமது நம்பிக்கையும் செபமும் இவருடைய பாவங்களுக்கு மன்னிப்பையும், இறைவனின் இரக்கத்தையும் பெற்றுத் தரவும், நாமும் நேரிய உள்ளத்தோடு வாழ்ந்து, விண்ணக வாழ்வைப் பெற்றுக் கொள்ளவும், நாம் ஒருவர் ஒருவருக்காக செபிப்போம். 'நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்' என்று யோவான் (12:32) நற்செய்தி வழியாக நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியது போலவே, அவர் இறந்த மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார். அதுபோலவே இவரும் உயிர்த்தெழ, இவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு இறைவனிடம் ஈர்த்துக் கொள்ளப்படவும் நாம் செபிப்போம். 'ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்' (யோவான் 11:21) என்று கண்ணீரோடும் துயரத்தோடும் கூறிய மரியாவைப் போல, இவரது பிரிவால் வேதனையோடு இங்கு கூடியிருக்கின்ற இக்குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இறைவன் தனது அளவற்ற அன்பாலும், மிகுதியான இரக்கத்தாலும் ஆறுதல் தரும்படி இந்நேரத்தில் சிறப்பாக மன்றாடுவோம். ஆமென்.

(இப்போது செபமாலை அல்லது இறை இரக்க செபத்தையும், அதனைத் தொடர்ந்து, நேரம் இருந்தால், இறந்தோருக்கான மன்றாட்டு மாலையையும் செபிக்கவும்)

முத : மன்றாடுவோமாக! ஆண்டவரே, அளவில்லாத வேதனையில் உம்மைக் கூவி அழைக்கிறோம். உமது திருவுளப்படி இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்ற உமது அடியார் ___________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவை ஒளியும் அமைதியும் நிறைந்த இடத்திற்கு வரவேற்றருளும். புனிதர்களின் தோழமையில் இவருக்கு இடமளித்தருளும். 'என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்' (யோவான் 11:25) என்று சொன்ன நீர், இவருடையக் குற்றங்களை மன்னித்து, இவருக்கு உமது உயிர்ப்பிலும் பங்கு அளித்தருளும். இவரது பிரிவு எங்களுக்குத் துயர் மிக்கதாக இருந்தாலும், இவருக்கு நீர் தரப்போகும் மகிமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீரே அனைவரையும் மீட்க மனுவுரு எடுத்தீர். உமது மனுவுருவும், பாடுகளும், இறப்பும், இவருக்கு உமது உயிர்ப்பிலும் இடமளிப்பதாக. இவரது குடும்பத்தாரும், நீர் இவருக்குத் தரவிருக்கும் நிலைவாழ்வில் ஆறுதல் பெற்று உமது அன்பையும் ஆதரவையும் என்றும் பெற்றுக் கொள்வார்களாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

எல் : ஆமென்.

## இறைவார்த்தை

### முதல் வாசகம்

**சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம். (3 : 1 – 6, 9)**

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடும் தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப் போல் அவர்கள் தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெரும் துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக இளைப்பாறுகிறார்கள். மனிதர் பார்வையில் அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், இறவாமையில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சிறிதளவு அவர்கள் கண்டித்துத் திருத்தப்பட்டபின், பேரளவு கைம்மாறு பெறுவார்கள். கடவுள் அவர்களைச் சோதித்தறிந்த பின், அவர்களைத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் என்று கண்டார். பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவது போல் அவர் அவர்களைப் புடமிட்டார். எரிபலி போல் அவர்களை ஏற்றுக் கொண்டார். அவரை நம்புவோர் உண்மையை அறிந்து கொள்வர். அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர். அருளும் இரக்கமும் அவர் தேர்ந்து கொண்டோர் மீது இருக்கும்.

ஆண்டவரின் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

(பின்னால் இணைக்கப்பட்டதிலிருந்து பொருத்தமான பாடல் ஒன்றைப் பாடவும்)

## நற்செய்தி வாசகம்

**லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம். (7 : 11 – 15)**

அக்காலத்தில், இயேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும் பெரும் திரளான மக்களும் அவருடன் சென்றனர். அவர் அவ்வூர் வாயிலை நெருங்கி வந்த போது, இறந்த ஒருவரைச் சிலர் தூக்கி வந்தனர். தாய்க்கு அவர் ஒரே மகன். அத்தாயோ கைம்பெண். அவ்வூரைச் சேர்ந்த பெரும் திரளான மக்களும் அவரோடு இருந்தனர். அவரைக் கண்ட ஆண்டவர், அவர் மீது பரிவு கொண்டு, 'அழாதீர்' என்றார். அருகில் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர், 'இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு' என்றார். இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இயேசு அவரை அவர் தாயிடம் ஒப்படைத்தார்.

கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

## நம்பிக்கையாளர் மன்றாட்டு

முத : இயேசு கிறிஸ்துவில் அன்பார்ந்தவர்களே, உயிர்த்த இயேசு தந்தையின் வலப் பக்கத்தில் அமர்ந்து, நமக்காகப் பரிந்து பேசுகிறார். அவரில் நம்பிக்கை கொண்டிருக்கும் நம் அனைவரின் குரலையும் கேட்கும் தயவுள்ளவர் நம் விண்ணகத் தந்தை. இப்போது நாம் நம் மன்றாட்டுக்களைச் சமர்ப்பிப்போம்.

பதில் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : இறைவா, இறந்து போன உமது அடியார் ___________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்கள், திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் ஒளியைப் பெற்று, அவருடையத் திருவிருந்திலும் பங்கு கொண்டார். இருளை அகற்றி அவருக்கு ஒளி கொடுக்கும் விண்ணக மகிமைக்கு இவரை அழைத்துச் செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, சிலுவையைச் சுமந்து, இரத்தம் சிந்தி, மனித மீட்புக்குக் காரணமாக இருந்த உமது திருமகனின் இறப்பினால், இவர் அறிந்தும் அறியாமலும் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, எங்களை விட்டுப் பரிந்து சென்ற எங்கள் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உமது நிலைவாழ்வை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, போரினாலும், இயற்கைப் பேரிடர்களாலும், தொற்றுநோய்களாலும், வன்முறைப் போராட்டங்களினாலும் இறந்து போன அனைவருக்கும் உமது விண்ணக வாழ்வையும் அமைதியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, இறந்து போன உமது அடியார் ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், இவருடைய இறப்பால் ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு ஈடாக உமது அன்பையும் ஆறுதலையும் அளித்து, இவர்கள் அனைவரும் இத்துயரிலிருந்து விரைவில் மீளத் துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, இறந்து போன உமது அடியார் ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்காகச் செபிக்கக் கூடியிருக்கும் எங்கள் அனைவரின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தி, உமது திரு மகனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கச் செய்ய எங்களுக்கு வலிமை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, இறந்து போன அனைத்து ஆன்மாக்களும், குறிப்பாக, யாரும் நினையாத ஆன்மாக்களும், உத்தரிக்கும் தலத்திலிருக்கும் ஆன்மாக்களும், உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : நாம் அனைவரும் இறந்து போன __________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய, நம் இயேசு கிறிஸ்து கற்பித்தபடி மன்றாடுவோம். தொடர்ந்து நம் அன்னை மரியாவின் பரிந்துரையையும் நாடுவோம்.

(1 கர்த்தர் கற்பித்த செபம், 3 அருள், 1 மூவொரு இறை புகழ் சொல்லவும்)

## இறுதிச் செபம்

முத : மன்றாடுவோமாக! இரக்கம் மிகுந்தத் தந்தையே, ஆறுதலின் தெய்வமே, உமது திருமகன் வழியாக நீரே எங்களை மீட்டுக் கொண்டீர். எங்களை விட்டுப் பிரிந்து சென்ற உம் அடியார் ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவை உம்மிடம் ஒப்படைக்கிறோம். நீரே இவரைத் திருமுழுக்கு வழியாக உமது பிள்ளையாக்கிக் கொண்டீர். உமது திருமகனின் உடலாலும் இரத்தத்தாலும் இவருக்கு அருள் வளம் ஈந்தீர். இதோ, இவரின் இறுதி வேளையிலும் நீரே உடனிருந்து, உமது விண்ணக வீட்டிலும் இவருக்கு இடமளித்தருளும். அதற்குத் தடையாக இருக்கும் இவருடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருளும். இவர் வாழ்ந்த வாழ்வையும், இவர் செய்த சாதனைகளையும், இவருடைய விசுவாசத்தையும், இவர் அனுபவித்த நன்மை தீமைகளையும் நாங்கள் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இவ்வேளையிலே, உமது இரக்கம் நிறைந்த அன்புப் பார்வை இவருக்குக் கிடைத்து, உமது திருமுக ஒளியைப் பெற்றுக் கொள்வாராக. இவரைப் பிரிந்து துன்பத்தில் வாழும் அனைவரையும் தேற்றியருளும். உமது திருமகன், எங்கள் இறப்பை தமது இறப்பால் அழித்து, தமது உயிர்ப்பினால் மீண்டும் எங்களுக்கு நிலையான வாழ்வைப் பெற்றுத் தந்தார். ஆதலால், எங்கள் கண்ணீர் எல்லாம் துடைக்கப்பட்டு, உலக முடிவில் நாங்களும் உம்மிடம் வந்து சேர அருள் தாரும். உம்மோடு, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

முத : நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், ஆண்டவரே!

எல் : முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

முத : இறந்து போன ___________________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவும், இறந்த அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்களும் இறைவனின் இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக.

எல் : ஆமென்.

## இறுதிப் பாடல் (பின்னால் இணைக்கப்பட்டுள்ள பாடலில் ஒன்றைப் பாடவும்)

**********



நித்திய இளைப்பாற்றியை
அளித்தருளும், ஆண்டவரே...
முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக...

# இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 2

**தொடக்கப் பாடல்** (பின்னால் இணைக்கப்பட்டுள்ளப் பாடலில் ஒன்றைப் பாடவும்)

**தொடக்கச் செபம்**

முத : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
எல் : ஆமென்.

முத : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும், கடவுளுமானவர் போற்றப் பெறுவாராக. அவர் இரக்கம் நிறைந்தத் தந்தை, ஆறுதல் அனைத்துக்கும் ஊற்றானக் கடவுள். அவரே நமக்கு எல்லா வகையான துன்பத்திலும், துயரத்திலும், வேதனையிலும் ஆறுதல் அளித்து வருகிறார். இவ்வாறு, நாம் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆறுதலால் எத்தகைய வேதனையில் இருப்போருக்கும் நாமும் ஆறுதல் அளிக்க முடியும்.
எல் : ஆண்டவர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!

முத : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்தக் கடவுள், அதில் நம்மையும் நம் அன்புக்குரிய ________________யும் (இறந்தவரின் பெயரைச் சொல்லி) படைத்தார். இன்று, ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்கள் நம்முடன் இல்லை. இறைவன் இவரை தம்மிடம் அழைத்துக் கொண்டார். இவரின் இறப்பு நமக்கும், இவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் பெரிய இழப்பாக இருந்தாலும், 'இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்' என்று திருவெளிப்பாடு நூலில் (14:13) வாசிப்பது போல, இவரும் ஆண்டவரோடு இணையும் தகுதியைப் பெறுவதற்காக செபிப்பது மட்டுமே நம் முதன்மையான கடமையாகும். இவர் வாழ்ந்தக் காலத்தில் ஆண்டவரோடு இணைந்து, அவரது விசுவாசத்தில் வாழ்ந்தார். ஆண்டவரை நோக்கியத் தனது பயணத்தைத் தொடங்கியிருக்கும் இவருக்கு அவரே உதவியாயிருந்து, தனது இரக்கத்தையும் மன்னிப்பையும் அளிப்பாராக. 'இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவது இல்லை என்றால் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும்' என்று பவுல் (1 கொரிந்தியர் 15:16) கொரிந்து நகர மக்களுக்குக் கூறுவது ஏனென்றால் இயேசுவின் உயிர்ப்பு எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவரை விசுவசித்தோரும் உயிர்த்தெழுவர் என்பதைக் காட்டவே. எனவே, இறப்பினால் உருவாகும் துயரத்தையும் வேதனையையும் விட்டுத் திடமுடன் இருப்போம். நம்பிக்கையோடு ஆண்டவரிடம் செபிப்போம். இக்குடும்பத்தாருக்கு அவர் ஆறுதல் தர வேண்டும் எனச் செபிப்போம். அவர் நம்மைத் தேற்றுவார், தாங்குவார், என்றும் நமக்குத் துணையாக இருப்பார். ஆமென்.

(இப்போது செபமாலை அல்லது இறை இரக்க செபத்தையும், அதனைத் தொடர்ந்து, நேரம் இருந்தால், இறந்தோருக்கான மன்றாட்டு மாலையையும் செபிக்கவும்)

முத : மன்றாடுவோமாக! ஆண்டவரே, வேதனைகளும் துயரங்களும் எங்களை அழுத்தினாலும், நாங்கள் நம்பிக்கையுடன் உம்மை நோக்கி மன்றாடுகிறோம். உமது வல்லமையையும் இரக்கத்தையும் நம்பிச் செபிக்கிறோம். அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் (1 கொரிந்தியர் 15:54) பெறச் செய்யும் உமது வல்லமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். வலுவிழந்து நிற்கும் எங்களுக்குத் துணையாக வந்தருளும். குறிப்பாக, 'நாம் யாவரும் சாகமாட்டோம். ஆனால், அனைவரும் மாற்றுரு பெறுவோம்' (1 கொரிந்தியர் 15:54) என்று புனித பவுலின் வழியாக நீர் கற்பித்த வார்த்தைகளை நம்பி வாழ்ந்த உமது அடியார் ________________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மா உம்மோடு அமைதியில் இளைப்பாறுவதாக. உமது இரக்கம் இவருக்குக் கிடைப்பதாக. உமது சாயலாகப் படைக்கப்பட்ட இவருக்கு உமது இறையரசிலும் இடம் கிடைப்பதாக. அதனால், இவருடைய உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதல் கிடைப்பதாக. எங்கள் துன்பங்களும் துயரங்களும் வேதனைகளும் உம் மீதுள்ள நம்பிக்கையால் விரைவில் நீங்குவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## இறைவார்த்தை

### முதல் வாசகம்

**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். (25 : 6 – 9)**

படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார். அதில் சுவைமிக்கப் பண்டங்களும், பழரசப் பானமும், கொழுப்பான இறைச்சித் துண்டுகளும், வடிகட்டிப் பக்குவப்படுத்தியத் திராட்சை இரசமும் பரிமாறப்படும். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார். பிற இனத்தார் அனைவரின் துன்பத் துகிலைத் தூக்கி எறிவார். என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார். என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரை துடைத்து விடுவார். தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றி விடுவார். ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார். அந்நாளில் அவர்கள் சொல்வார்கள், 'இவரே நம் கடவுள். இவருக்கென்றே நாம் காத்திருந்தோம். இவர் நம்மை விடுவிப்பார். இவரே ஆண்டவர். இவருக்காகவே நாம் காத்திருந்தோம். இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம்.'

ஆண்டவரின் அருள்வாக்கு.

இறைவனுக்கு நன்றி.

(பின்னால் இணைக்கப்பட்டதிலிருந்து பொருத்தமான பாடல் ஒன்றைப் பாடவும்)

## நற்செய்தி வாசகம்

**மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம். (11 : 25 – 30)**

அக்காலத்தில் இயேசு, 'தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்' என்று கூறினார். மேலும் அவர், 'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத் தாழ்மையும் உடையவன். ஆகவே, என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது' என்றார்

கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

## நம்பிக்கையாளர் மன்றாட்டு

முத : இயேசு கிறிஸ்துவில் அன்பார்ந்தவர்களே, கல்லறையிலிருந்து மூன்றாம் நாள், மரணத்தை வென்று, வெற்றி வீரராக உயிர்த்த இயேசு கிறிஸ்துவில் நமது நம்பிக்கையை வைத்து, இறந்து போன ______________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்காக உருக்கமாக மன்றாடுவோம்.

பதில் : இரக்கமுள்ள இறைவா, எங்களுக்குச் செவி சாய்த்தருளும்.

முத : இறைவா, உமது வல்லமையால் உமது திருமகன் இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்தீரே. அதே உயிர்ப்பில், இறந்து போன உமது அடியார் ______________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களும் பங்கு பெற அனைத்துத் தடைகளையும், பாவங்களையும் நீக்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, திருமுழுக்கினால் புதுப்பிறப்பு அடைந்து, திவ்விய நற்கருணையில் உம்மைச் சுவைத்த ______________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்கள், உலகக் கட்டுகளிலிருந்து விடுபட்டு, நிலையான பேரின்ப வாழ்வைப் பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, இவ்வுலக வாழ்வில் நீர் ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும், இவர் வழியாக நாங்கள் அடைந்த பயன்களுக்காகவும் நன்றி செலுத்துகிறோம். இவருக்கு மறு உலகிலும் உமது இரக்கம் கிடைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, கெத்சமேனிப் பூங்காவில் இரத்த வியர்வை வியர்த்த உம் திருமகன் இயேசு கிறிஸ்துவை திடப்படுத்திய நீர், இவருடைய இறப்பால் வேதனையுறும் குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் துணை நின்று அவர்களைத் தேற்றி ஆறுதல் படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, எரியும் நெருப்பிலிருந்து மூன்று இளைஞர்களைக் நீர் காப்பாற்றியது போல இறந்து போன __________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களை தண்டனைத் தீர்ப்பிலிருந்து காத்து, இறந்த எங்கள் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் யாரும் நினையாத ஆன்மாக்கள் அனைவரும் உமது இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : இறைவா, எங்கள் நாட்டுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த அனைவரையும், விபத்துகளாலும், இயற்கைப் பேரிடர்களாலும் எதிர்பாராத மரணத்தைச் சந்தித்தவர்களையும், கைவிடப்பட்டு, ஏமாற்றம், விரக்தியினால் மரித்தவர்களையும் உமது நிலைவாழ்வுக்குத் தகுதி உடையவர்களாக மாற்ற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

முத : நாம் அனைவரும் இறந்து போன ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய, நம் இயேசு கிறிஸ்து கற்பித்தபடி மன்றாடுவோம். தொடர்ந்து நம் அன்னை மரியாவின் பரிந்துரையையும் நாடுவோம்.

(1 கர்த்தர் கற்பித்த செபம், 3 அருள், 1 மூவொரு இறை புகழ் சொல்லவும்)

## இறுதிச் செபம்

முத : மன்றாடுவோமாக! இரக்கம் மிகுந்த தந்தையாகிய இறைவா, எங்கள் விசுவாசமும் நம்பிக்கையும், உயிர்த்த உம் திருமகனில் என்றும் உள்ளது என்பதை நீர் அறிவீர். உம்மிடம் வந்துள்ள உம் அடியார் ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்கு உம் திருமகன் தரும் மகிமையில் பங்கு கொடுப்பீராக. சுமை சுமந்து, சோர்வுற்று வாழும் வாழ்வால் இவருக்கு ஏற்பட்டத் தடைகளை அகற்றி, இவருக்கு இனிமையும், மகிழ்ச்சியும் நிறைந்த விண்ணக வாழ்வைப் பரிசாக அளிப்பீராக. உம்மோடும், அன்னை மரியாவோடும், வானக தூதரணிகளோடும், புனிதர்களின் பெருந்திரளோடும் இவரும் சேர்ந்து, தூயவரான உம்மைப் புகழ்ந்திட அருள் புரிவீராக. இவ்வுலகில் இவருக்கு நீர் காட்டிய அன்பும், ஆதரவும், இரக்கமும் தொடர்ந்து கிடைப்பதாக. உமது இரக்கத்திற்கு ஏற்ப இவரின் குற்றங்களையும், பாவங்களையும் மன்னிப்பீராக. இறந்தோருக்கு ஆதரவும், பாவிகளுக்கு அடைக்கலமும், விண்ணக மண்ணக அரசியுமான கன்னி மரியாவின் பரிந்துரையால் இவர் உமது தயவைப் பெற்றுக் கொள்வாராக. 'இறைவனின் ஆசி பெற்றோர் நிலத்தை உடைமையாக்கிக் கொள்வர்' (திருப்பாடல் 37:22) என்ற வார்த்தைகள் தரும் நம்பிக்கையால் உம்மை நோக்கிக் கூவியழைக்கும் எங்கள் அனைவரின் குரலுக்குச் செவி சாய்த்து, உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை இவருக்கு அளித்தருளும். அதே மகிழ்ச்சியில், இவரை இழந்து தவிக்கும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், தங்களைத் தேற்றிக் கொள்வதோடு, உமது ஆறுதலும் துணையும் இவர்களுக்கு என்றும் உள்ளது என்ற நிம்மதியில் இவர்கள் வாழ்வார்களாக. உம்மோடு, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

முத : நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், ஆண்டவரே!

எல் : முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

முத : இறந்து போன ________________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவும், இறந்த அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்களும் இறைவனின் இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக.

எல் : ஆமென்.

## இறுதிப் பாடல் (பின்னால் இணைக்கப்பட்டுள்ள பாடலில் ஒன்றைப் பாடவும்)

**********



இறந்த அனைத்து விசுவாசிகளின்
ஆன்மாக்களும் இறைவனின் இரக்கத்தால்
நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக...
ஆமென்.

# இறந்தோர் வீட்டில் செப வழிபாடு 3

**தொடக்கப் பாடல்** (பின்னால் இணைக்கப்பட்டுள்ளப் பாடலில் ஒன்றைப் பாடவும்)

**தொடக்கச் செபம்**

முத : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...

எல் : ஆமென்.

முத : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும், கடவுளுமானவர் போற்றப் பெறுவாராக. அவர் இரக்கம் நிறைந்தத் தந்தை, ஆறுதல் அனைத்துக்கும் ஊற்றானக் கடவுள். அவரே நமக்கு எல்லா வகையான துன்பத்திலும், துயரத்திலும், வேதனையிலும் ஆறுதல் அளித்து வருகிறார். இவ்வாறு, நாம் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆறுதலால் எத்தகைய வேதனையில் இருப்போருக்கும் நாமும் ஆறுதல் அளிக்க முடியும்.

எல் : ஆண்டவர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!

முத : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, விண்ணகத் தந்தையின் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தப் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் விசுவாசத்தில் ஒன்றுபட்ட மனம் உள்ளவர்களாக இங்கு ஒன்று கூடியிருக்கிறோம். நம்மை விட்டுப் பிரிந்து, இன்று நம் விண்ணகத் தந்தையிடம் சென்றிருக்கின்ற ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்கும் இதே விசுவாசம் இருந்தது என்பதாலும், இவருக்கு இந்நேரத்தில் கடவுளின் பரிவும் இரக்கமும் தேவை என்பதாலும், இவருக்காகச் செபிக்க நாம் ஒன்று கூடியிருக்கிறோம். 'ஆண்டவர் கொல்கின்றார், உயிரும் தருகின்றார். நம்மைப் பாதாளத்தில் தள்ளுகின்றார், உயர்த்துகின்றார்' (1 சாமுவேல் 2:6) என்று செபிக்கின்ற அன்னாளைப் போல நாமும் செபிப்போம். இறந்து போன இவரை இவ்வுலகிற்குக் கொடுத்ததும் அவரே, இவ்வுலகில் இவரை வாழ வைத்ததும் அவரே, இன்று இவரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டதும் அவரே. இவருடையப் பாவங்களை மன்னித்து, இவரை நரக நெருப்பிலிருந்து மீட்டு, உத்தரிக்கும் தலத்திலிருக்கும் தண்டனையைக் குறைத்து, நிலையான நிறைவாழ்வை அருளுமாறு உருக்கமாக மன்றாடுவோம். 'நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு வந்தேன். அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்தேன்' (யோவான் 10:10) என்று கூறிய நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பாடுகள் பட்டு, இரத்தம் சிந்தி, சிலுவையிலே மரித்தது, இவரும் வாழ்வை மிகுதியாய் பெற வேண்டும் என்பதற்காகவே. இவர் இயேசுவில் கொண்டிருந்த விசுவாசம் இவருக்கு நிலையான நிறைவாழ்வைப் பெற்றுத் தருவதாக. 'எனவே, அஞ்சாதிருங்கள்' (மத்தேயு 10:31) என்று நமக்குச் சொல்லும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இதோ, இவரை இழந்து துயறுற்றுத் தவிக்கும் உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதலாக இருந்து, இவர்களின் கண்ணீரைத் துடைக்கிறார் என்ற நம்பிக்கையோடு

மன்றாடுவோம். இவர் உயிரோடிருந்தக் காலத்தில், இவரால் பல நன்மைகளைப் பெற்றுக் கொண்ட நாம் அனைவரும், இந்த நேரத்தில் இவருக்காக நன்றியோடு மன்றாடுவோம். இரக்கம் நிறைந்த இறைவன் தமது அன்பாலும், அருளாலும், வல்லமையாலும் 'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என நான் உறுதியாக உமக்குச் சொல்கிறேன்' (லூக்கா 10:31) என்று இவருக்கு கட்டளை இடுவாராக. ஆமென்.

(இப்போது செபமாலை அல்லது இறை இரக்க செபத்தையும், அதனைத் தொடர்ந்து, நேரம் இருந்தால், இறந்தோருக்கான மன்றாட்டு மாலையையும் செபிக்கவும்)

முத : மன்றாடுவோமாக! இரக்கம் நிறைந்த இறைவா, மன்னிப்பு அருள்பவர் நீரே. ஊதாரியான மகனை மன்னித்தத் தந்தையின் அன்பு உம்முடைய அன்பு. காணமல் போன ஆட்டினைத் தேடிக் கண்டடைந்தப் பாசம் உம்முடையப் பாசம். இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்ற உமது அடியார் ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் தகுதியின்மையையும், எங்களின் தகுதியின்மையையும் பாராமல், நாங்கள் நம்பிக்கையோடு உமக்குக் காட்டும் விசுவாசத்தை மட்டும் கண்ணோக்கி, இப்போது இவருக்கு இரக்கம் காட்டுவீராக. இவ்வுலக வாழ்வில் உம்மையே நம்பி வாழ்ந்த இவரைக் கைவிடாதேயும். உமது இரக்க மிகுதியால் இவரை மீட்டருளும். உயிர்ப்பும் உயிரும் நீரே என்பதை நாங்கள் முழுமையாக விசுவசிக்கிறோம். இவருக்குப் புனிதர்களின் தோழமையில் பங்களித்து மகிமைப்படுத்துவீராக. உம்மால் இவருக்குக் கிடைக்கும் மகிமையால் இவரைப் பிரிந்து துயருறும் இவருடைய உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஆறுதல் அடைவார்களாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## இறைவார்த்தை

### முதல் வாசகம்

**இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம். (12 : 1 – 3)**

'அக்காலத்தில், உன் இனத்தார்க்குத் தலைமைக் காவலரான மிக்கேல் எழும்புவார். மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராதத் துன்பக் காலம் வரும். அக்காலத்தில், உன் இனத்தார் விடுவிக்கப்படுவர். நூலில் யார்யார் பெயர் எழுதப் பட்டுள்ளதோ. அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள். இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகின்ற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர், வேறு சிலரோ வெட்கத்திற்கும், முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர். ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண் மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்.

ஆண்டவரின் அருள்வாக்கு.

இறைவனுக்கு நன்றி.

(பின்னால் இணைக்கப்பட்டதிலிருந்து பொருத்தமான பாடல் ஒன்றைப் பாடவும்)

### நற்செய்தி வாசகம்

**யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம். (12 : 23 – 26)**

அக்காலத்தில், இயேசு மக்களைப் பார்த்து, 'மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்' என்றார்.

கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

### நம்பிக்கையாளர் மன்றாட்டு

முத : இயேசு கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, 'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத்தேயு 11:28) என்று சொன்ன நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக நம் மன்றாட்டுக்களை நம் விண்ணகத் தந்தையிடம் நம்பிக்கையுடன் சமர்ப்பிப்போம்.

பதில் : கருணையின் தேவனே, தயவாய் அருள் புரிந்தருளும்.

முத : இறைவா, உயிரும் உயிர்ப்புமான உம் திருமகனின் பெயரில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து, இன்று இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட உமது அடியார் ______________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்கு மறு உலகிலும் இடமளித்திட வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, இறந்த இலாசரை உயிர்பெற்று எழச் செய்த உம் திருமகனின் உடலை உண்டு, இவரில் இணைந்து வாழ்ந்த இவருக்கு, அவரது உயிர்ப்பிலும் பங்களிக்க வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, பாவத்தை வெல்லச் சிலுவையில் தன் உயிரைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவில் இவர் கொண்டிருந்த விசுவாசம், இவருக்கு உமது மீட்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, ஏழை விதவையின் கண்ணீரைத் துடைத்த உம் திருமகனின் ஆறுதலும், ஆதரவும், அரவணைப்பும், பாதுகாப்பும், உதவியும், இவரை இழந்து வருந்தும் உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, எங்களது குடும்பத்தில் மரித்த அனைத்து ஆன்மாக்களும், யாரும் நினையாத ஆன்மாக்களும், மற்ற அனைத்து ஆன்மாக்களும், உம் புனிதர்களோடும், வானகத் தூதர்களோடும் விண்ணக மகிமையில் பங்கு பெற வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, இறந்து போன உமது அடியார் ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்காகச் செபிக்கக் கூடியிருக்கும் எங்கள் அனைவரின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தி, உமது திரு மகனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கச் செய்ய எங்களுக்கு வலிமை அளித்திட வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : இறைவா, எங்கள் நாட்டில் நடந்த பல கலவரங்களிலும், விபத்துக்களிலும், இயற்கைப் பேரிடர்களிலும் மரணத்தைத் தழுவிய அனைவருக்கும் உமது இரக்கத்தைக் காட்ட வேண்டுமென்று மன்றாடும் எங்களுக்கு...

முத : நாம் அனைவரும் இறந்து போன ______________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய, நம் இயேசு கிறிஸ்து கற்பித்தபடி மன்றாடுவோம். தொடர்ந்து நம் அன்னை மரியாவின் பரிந்துரையையும் நாடுவோம்.

(1 கர்த்தர் கற்பித்த செபம், 3 அருள், 1 மூவொரு இறை புகழ் சொல்லவும்)

### இறுதிச் செபம்

முத : மன்றாடுவோமாக! ஆறுதல் அளிக்கும் இறைவா, கருணையும் அன்பும் கொண்ட நீர், மனுக்குலம் மீட்புப் பெற உமது ஒரே திருமகன் இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினீர். அவர் எங்களுக்காகத் தன்னையே இழந்து, மனித இயல்பை ஏற்று, பாடுகள் பல பட்டு, சிலுவையில் தமது விலை மதிப்பில்லாத இரத்தத்தைச் சிந்தி, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் சாவை வென்று எங்களுக்குப் பெற்றுக் கொடுத்தப் புதுவாழ்வை, எங்களை விட்டுப் பிரிந்து சென்ற உம் அடியார் ________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களும் உமது தயவால் பெற்றுக் கொள்வாராக. அமைதியும் ஒளியும் நிறைந்த இடம் இவருக்குக் கிடைக்க, இவருடையப் பாவங்கள் அனைத்தையும் நீர் மன்னித்தருளும். உமது மீட்புத் துணை பொங்கி வழியட்டும். 'நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப் பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்ட மாட்டேன்' (கலாத்தியர்

6:14) என்ற புனித பவுலின் வார்த்தைகளைப் போல, இயேசு கிறிஸ்துவின் சிலுவை இவருக்கு வெற்றியின் பெருமையை அளிப்பதாக. எங்களது அன்றாடச் சிலுவைகளைச் சுமந்து கொண்டு உம்மை நோக்கி வரும் எங்கள் அனைவரையும் இரக்கத்துடன் கண்ணோக்கியருளும். குறிப்பாக, இவருடைய மரணத்தால் ஏற்பட்டுள்ள பேரிழப்புகளைத் தாங்கும் சக்தியை இவருடைய குடும்பத்தாருக்குத் தந்தருளும். உம்மை நம்பி வந்தவர்களைக் என்றும் கைவிடாதவர் நீர். உமது நிலைவாழ்வை நோக்கியப் பயணத்தைத் தொடங்கி உள்ள உம் அடியார் ___________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களுக்கு முடிவில்லாதப் பேரின்ப வாழ்வை அளித்தருளும். அதே தகுதியை எங்களுக்கும், உம்மை விசுவசித்து உம் வழியில் வாழும் அனைவருக்கும் தந்தரும். உம்மோடு, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

முத : நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், ஆண்டவரே!

எல் : முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

முத : இறந்து போன ________________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவும், இறந்த அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்களும் இறைவனின் இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக.

எல் : ஆமென்.

**இறுதிப் பாடல்** (பின்னால் இணைக்கப்பட்டுள்ள பாடலில் ஒன்றைப் பாடவும்)

**********



மண்ணில் வாழ்ந்து செல்லும் மனிதா
விண்ணில் தேவன் இன்பம் தருவார்.
அன்று உன்னை அழைத்த தேவன்
இன்றும் உன்னை அழைக்கின்றார்.

# இறந்தோருக்கான மன்றாட்டு மாலை

முத : ஆண்டவரே இரக்கமாயிரும்.
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
முத : ஆண்டவரே இரக்கமாயிரும்.
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்!
எல் : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்!

முத : விண்ணகத் தந்தையாகிய இறைவா…
எல் : இந்த ஆன்மா மீது இரக்கமாயிரும்.
முத : உலகை மீட்டத் திருமகனாகிய இறைவா…
எல் : இந்த ஆன்மா மீது இரக்கமாயிரும்.
முத : தூய ஆவியாராகிய இறைவா…
எல் : இந்த ஆன்மா மீது இரக்கமாயிரும்.
முத : மூவொரு கடவுளாகிய இறைவா…
எல் : இந்த ஆன்மா மீது இரக்கமாயிரும்.

பதில் : இந்த ஆன்மாவுக்காக வேண்டிக்கொள்ளும்/வேண்டிக்கொள்ளுங்கள்.

முத : புனித மரியே, இறைவனின் தாயே…
முத : வியாகுல அன்னையே…
முத : இடைவிடா சகாயத் தாயே…
முத : விண்ணகத்தின் அரசியே…
முத : புனித மிக்கேலே, புனித கபிரியேலே, புனித இரஃபேலே…
முத : இறைவனின் எல்லா வானதூதர்களே…
முத : புனித திருமுழுக்கு யோவானே…
முத : புனித யோசேப்பே…
முத : எல்லா மூதாதையர்களே…
முத : எல்லா இறைவாக்கினர்களே…
முத : புனித பேதுருவே…
முத : புனித பவுலே…
முத : புனித யோவானே…
முத : புனித யாக்கோபே…
முத : அனைத்து திருத்தூதர்களே…
முத : அனைத்து நற்செய்தியாளர்களே…
முத : புனித சுவக்கீன் அன்னம்மாளே…
முத : புனித அந்தோணியாரே…

முத : புனித பிரான்சிஸ் சவேரியாரே...
முத : அசிசியின் புனித பிரான்சிசே...
முத : அசிசியின் புனித கிளாரம்மாவே...
முத : புனித இஞ்ஞாசியாரே...
முத : புனித ஸ்தேவானே...
முத : புனித தெரசம்மாளே...
முத : இறைவனின் எல்லா புனிதர்களே...

பதில் : இந்த ஆன்மாவை மீட்டருளும்.

முத : பாவம் அனைத்திலுமிருந்து...
முத : முடிவில்லாத இறப்பிலிருந்து...
முத : உம்முடைய திருப்பிறப்பினாலே...
முத : உம்முடைய திருமுழுக்கினாலே...
முத : உம்முடைய திருத்தவத்தினாலே...
முத : கெத்சமேனியில் நீர் சிந்திய இரத்த வியர்வையினாலே...
முத : உம்முடைய உடலில் நீர் பெற்ற கசை அடியினாலே...
முத : உம்முடைய தலையில் நீர் தாங்கிய முள்முடியினாலே...
முத : உம்முடைய தியாகச் சிலுவைச் சாவினாலே...
முத : உம்முடைய மகிமையான உயிர்ப்பினாலே...
முத : உம்முடைய விண்ணேற்றத்தினாலே...
முத : உம்முடைய தூய ஆவியாரின் வருகையினாலே...
முத : தொழுநோயாளியைக் குணப்படுத்திய நீர்...
முத : பார்வையற்றவனுக்குப் பார்வையளித்த நீர்...
முத : பேய்களை விரட்டிய நீர்...
முத : இறந்த இலாசரை உயிர்ப்பித்த நீர்...
முத : நல்ல கள்வனின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்த நீர்...
முத : மகதலா மரியாவை மன்னித்த நீர்...
முத : உம்மை மறுதலித்தப் பேதுருவை மன்னித்த நீர்...
முத : நம்பிக்கை குன்றியத் தோமாவை மன்னித்த நீர்...
முத : காணாமல் போனவர்களைத் தேடி மீட்க வந்த நீர்...

பதில் : உம்மை மன்றாடும் எங்களுக்குச் செவிசாய்த்தருளும்.

முத : எங்கள் உயிரும் உயிர்ப்புமான இயேசுவே...
முத : உம்மில் விசுவாசம் கொண்டு இறப்பவர்களின் நம்பிக்கையான இயேசுவே...
முத : உம்மை நம்புவோரின் மீட்பரான இயேசுவே...
முத : புனிதர்களின் மகிழ்ச்சியான இயேசுவே...
முத : ஆறுதல் அனைத்துக்கும் ஊற்றான இயேசுவே...
முத : இவருடைய குற்றங்களும் பாவங்களும் மன்னிக்கப்பட வேண்டுமென்று...

முத : ஒளியும், அமைதியும், மகிழ்வும் நிறைந்த இடத்துக்கு இவரை வரவேற்க வேண்டுமென்று...

முத : வருத்தமும், வேதனையும் நிறைந்த அனைவரும் உம்முடைய அளவில்லாத இரக்கத்தைப் பெற்று ஆறுதல் அடைய வேண்டுமென்று...

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!

எல் : எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!

எல் : எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும் படியாக...

எல் : இறைவனின் தூய அன்னையே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

முத : செபிப்போமாக! இறைவா, உம்மை விசுவசிக்கும் அனைவரையும் படைத்து, மீட்டு, பாதுகாப்பவர் நீரே. இறந்து போன உம் அடியார் ____________________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவுக்கும், இறந்த அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்களுக்கும் உமது மன்னிப்பை அளித்து, அவர்களை உமது இறை அரசில் சேர்த்தருளும். அவர்கள் எதிர்பார்க்கும் உமது இரக்கத்தையும் மன்னிப்பையும் எங்களது இந்த விசுவாசம் நிறைந்த செபம் பெற்றுத் தருவதாக. உம்மோடு, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

**********



# இறந்தோருக்கான அடக்கச் சடங்குகள்

## இறந்தவரின் இல்லத்தில்

குரு : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...

எல் : ஆமென்.

குரு : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தை, இரக்கம் நிறைந்த கடவுள். அவரே ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று, அவரைப் போற்றுவோம்.

(தீர்த்தம் தெளித்தபின், 130ம் திருப்பாடலை வாசிக்கவும்)

**பதிலுரைப்பாடல்** திருப்பாடல் 130

குரு : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

முத : ஆண்டவரே, ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகிறேன். ஆண்டவரே, என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். என் விண்ணப்பக் குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

முத : ஆண்டவரே, நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால், யார்தான் நிலைத்து நிற்க முடியும்? நீரோ மன்னிப்பு அளிப்பவர், மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பவர்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

முத : ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கிறேன், என் நெஞ்சம் காத்திருக்கின்றது, அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

முத : விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, ஆம்,விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, என் நெஞசம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றது.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

முத : இஸ்ரயேலே! ஆண்டவரையே நம்பியிரு. பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது. மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு. எல்லாத் தீவினைகளினின்றும் இஸ்ரயேலை மீட்பவர் அவரே.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : மன்றாடுவோமாக.
ஆண்டவரே, உமது இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடும் எங்களுக்குச் செவி சாய்த்தருளும். உமது கட்டளைப்படி இவ்வுலகை விட்டுச் சென்ற உம் அடியார் _______________ (இறந்தவரின் பெயரைச் சொல்லி) அவர்களின் ஆன்மாவை உமது அமைதியும் ஒளியும் நிறைந்த இடத்தில் வரவேற்று, உம் புனிதர்களுடையத் தோழமையில் சேர்த்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## இல்லத்திலிருந்து ஆலயத்துக்குப் பவனி

(இத்திருப்பலியில் பங்கேற்பவர்கள் ஏற்கெனவே வேறொரு திருப்பலியில் பங்கேற்று நன்மை வாங்கி இருப்பினும், மறுமுறையும் இத்திருப்பலியில் நன்மை உட்கொள்ளலாம். திருப்பலியின் நன்றி மன்றாட்டு முடிந்ததும், தொடர்ந்து குருவும் பணியாளரும் சவப் பெட்டி அருகே சென்று மக்களை நோக்கி நின்று இந்தச் செபத்தைச் சொல்வார்)

குரு : விசுவாசிகளின் வழக்கப்படி, இறந்தோரை நல்லடக்கம் செய்யும் கடமையை நிறைவேற்றக் கூடியிருக்கும் நாம், இறைவனைப் பக்தியுடன் மன்றாடுவோம். அனைத்தும் அவருக்கென்றே, உயிர் வாழ்கின்றன. நம் சகோதரரின் (சகோதரியின்) உடலை நலிவுற்ற நிலையில் நாம் அடக்கம் செய்தாலும், புனிதரின் வரிசையில் இது வல்லமை உள்ளதாக உயிர்த்தெழச் செய்வாராக. இவரது ஆன்ம புனிதரின் கூட்டத்திலே இடம்பெறக் கட்டளையிடுவாராக. தீர்ப்பிடும் போது இறைவன் இவருக்கு இரக்கம் காட்டுவதால் சாவே இவருக்கு மீட்பு அளிப்பதாகி, பாவக்கடன் ஒழிவதாக. தந்தையிடம் இவர் அன்புறவு கொள்ள நல்லாயன் இவரை அழைத்துச் செல்வாராக. இவர் என்றென்றும் வாழும் மன்னரின் பரிவாரத்தில் முடிவற்ற இன்பமும் புனிதரின் தோழமையும் பெற்று மகிழ்வாராக.

எல் : ஆமென்.

## பிரியாவிடை எதிர் பாடல்

குரு : இறைவனின் புனிதரே, துணை நிற்க வருவீர்!
தேவனின் தூதரே, எதிர் கொண்டு வருவீர்!

எல் : இவர் ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

குரு : உம்மைத் தம்மிடம் அழைத்த கிறிஸ்து உம்மை ஏற்றுக் கொள்வாராக.
தூதரும் உம்மை ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்ப்பாராக!

எல் : இவர் ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

குரு : நித்திய இளைப்பாற்றியை ஆண்டவரே, இவருக்கு இன்று அளித்திடுவீரே, முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்க.

எல் : இவர் ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

(அல்லது கீழ்கண்ட பாடலையோ வேறு பொருத்தமானப் பாடலையோ பாடலாம்)

சென்று வா கிறிஸ்தவனே உலகை வென்றுவிட்டாய் நீ விசுவாசத்தால்!

உற்றார் உறவினர் நண்பரெல்லாம் சுற்றி நின்று வழியனுப்ப,
உற்றத் துன்பத்தில் ஆறுதலாய், உதவும் திருச்சபை அருகிருக்க!

இறைவனின் புனிதரே துணை வருவீர்! தேவனின் தூதரே வந்தழைப்பீர்!
அடியார் ஆன்மா ஏற்றிடுவீர்! ஆண்டவர் திருமுன் சேர்த்திடுவீர்!

படைத்தத் தந்தை உனை ஏற்பார்! மீட்டத் திருமகன் உனைக் காப்பார்!
தூய ஆவியும் உனைச் சூழ்வார்! அனைத்துப் புனிதரும் உனைச் சேர்வார்!

(பாடல் முடிந்ததும் குரு தொடர்ந்து செபிப்பார்)

குரு : கிறிஸ்துவுக்குள் இறந்த அனைவரோடு இவரும் இறுதி நாளில் உயிர்த்தெழுவார் என்னும் உறுதியான நம்பிக்கையுடன், இரக்கம் மிகுந்த தந்தையே, உம்முடைய கைகளில் எம் சகோதரரின் (சகோதரியின்) ஆன்மாவை ஒப்படைக்கிறோம். எனவே, ஆண்டவரே, எங்கள் மன்றாட்டுக்குத் தயவாய் செவிசாய்த்து, உம் அடியாருக்குப் பேரின்ப வீட்டின் கதவுகளைத் திறந்தருளும். மேலும், இங்கு இருக்கும் நாங்கள் அனைவரும் கிறிஸ்துவை சந்தித்து, உம்மோடும் உம் சகோதரரோடும் (சகோதரியோடும்) எந்நாளும் ஒன்று சேர்ந்திருக்குமட்டும் விசுவாசம் நிறைந்த சொற்களால் ஒருவரையொருவர் தேற்றிக் கொள்ளச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

(பிரியாவிடைச் சடங்கு முடித்து இறந்தவர் உடலைக் கல்லறைத் தோட்டத்திற்குத் தூக்கிச் செல்கையில் கீழ்வரும் பாடல் இடம் பெறலாம்.)

### கல்லறைத் தோட்டத்திற்குப் பவனி

இறைவா இவரது திருப்பயணம் இனிதே அமைந்திட இறைஞ்சுகிறோம்!

பாஸ்காப் பயணம் இதுவே தான். கிறிஸ்தவர் செல்லும் வழி இது தான்.
இறப்பைக் கடந்து உயிர்ப்பிற்கு, இசைந்து செல்லும் வழி இது தான்.
அடிமைத் தலையை அறுத்தெரிந்து, ஆண்டவன் மக்கள் அன்றொரு நாள்,
உரிமை நாடு கடந்து சென்றார், உண்மை இங்கு நடப்பது தான்!

சிலுவை சுமந்த வழியினிலே, சீர்மிகு உயிர்ப்பும் பிறந்ததுவே!
சிலுவை பதித்த சுவடுகளில் சீடர் இருவரும் செல்கின்றார்!
துன்பத்தின் வழியாய் திருச்சபையும், தூரப் பயணம் போவது போல்,
பயணத்தின் முடிவில் இவ்வடியார் பரகதி சேர்ந்திட இறைஞ்சிடுவோம்!

விண்ணக விருந்து உண்டிடவே, விரைந்து செல்லும் இவ்வடியார்,
திருமகன் வந்து பார்க்கையிலே, திருமண உடையுடன் திகழ்ந்திடவே!
ஆண்டவர் அழைத்த நேரத்திலே, அணையா விளக்குடன் ஆயத்தமாய்,
உடனே செல்லும் ஊழியராம், உண்மையில் பேறுபெற்றவரே!

அந்நிய நாட்டின் எல்லைதனை, அடியார் இவரும் கடந்துவிட்டார்.
தாயகம் திரும்பும் பயணியிவர், தவறாது தன்வீடு சேர்ந்திடவே!
எனக்கு வாழ்வு கிறிஸ்துவே தான்! என்றும் அவரோடிருப்பதுதான்!
இழப்பு அனைத்தும் அவரின்றி இறப்பு ஆதலின் ஆதாயம்!

## கல்லறைத் தோட்டத்தில்

குரு : மன்றாடுவோமாக. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் கல்லறையில் மூன்று நாள்கள் துயில் கொண்டதால், உம் மீது விசுவாசம் கொண்ட அனைவரின் கல்லறைகளையும் புனிதப்படுத்துகின்றீர். எனவே, உடல் அடக்கத்திற்குப் பயன்படும் இக்கல்லறைகள் உயிர்த்தெழும் நம்பிக்கையையும் வளர்க்கின்றன. நீர் உம் அடியாரை உயிர்ப்பித்து இவருக்குப் பேரொளி தரும் அந்த நாள் மட்டும் இவர் இக்கல்றையில் அமைதியுடன் துயில் கொண்டு இளைப்பாறச் செய்தருள்வீராக. உயிர்ப்பும் உயிரும் நீரே. ஆதலால் இவர் உயிர்த்தெழுந்த பின் உம் திருமுக ஒளியில் விண்ணகத்தின் நித்திய ஒளியைக் காண்பாராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றல் நீரே.

எல் : ஆமென்.

(குரு கல்லறைக் குழியின் மீது தீர்த்தம் தெளித்து, தூபம் காட்டுவார்)

குரு : நம் சகோதரரை (சகோதரியை) இவ்வுலக வாழ்வினின்று தம்மிடம் அழைத்துக் கொள்ள எல்லாம் வல்ல இறைவன் திருவுளம் கொண்டதால், இவர் உருவான மண்ணிற்கே திரும்பிச் செல்லும்படி இவர் உடலை நிலத்திற்கு கையளிக்கிறோம். ஆவியினும், இறந்தோரிடமிருந்து தலைப்பேறாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தம் உடலின் சாயலாக உரு மாற்றுவார். ஆதலால் நம் சகோதரரை (சகோதரியை) ஆண்டவரிடம் ஒப்படைப்போம். ஆண்டவர் இவரைத் தம் அமைதியினுள் ஏற்றுக்கொள்வாராக, இவரது உடலையும் இறுதி நாளில் மகிமையுடன் உயிர்த்தெழச் செய்வாராக.

எல் : ஆமென்.

## விசுவாசிகள் மன்றாட்டு

குரு : உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான் என்று உரைத்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் நம் சகோதரருக்காக (சகோதரிக்காக) மன்றாடுகிறோம்.

முத : இறந்து போன லாசருக்காக கண்ணீர் சிந்தினீரே, எங்கள் கண்ணீரையும் துடைக்க உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : இறந்தோர் உயிர்பெற்றெழச் செய்தீரே, எங்கள் சகோதரருக்கு (சகோதரிக்கு) நித்திய வாழ்வளிக்க உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : மனம் திரும்பிய கள்ளனுக்கு நீர் வானகம் தருவதாய் உறுதியளித்தீரே, எங்கள் சகோதரரையும் (சகோதரியையும்) உமது வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரரை (சகோதரியை) திருமுழுக்கு நீரினால் கழுவி, திருப்பூசுதலால் முத்திரையிட்டீரே, இவரை வானகம் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரருக்கு (சகோதரிக்கு) உம் உடலையும் இரத்தத்தையும் திரு விருந்தாக அளித்தீரே, உமது விண்ணக விருந்திலும் இவரை அமரச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரரின் (சகோதரியின்) பிரிவினால் துயருறும் நாங்கள் உமது விசுவாசத்திலும், நித்திய வாழ்வின் நம்பிக்கையினாலும் ஆறுதல் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(அனைவரும் சேர்ந்து கர்த்தர் கற்பித்த செபம் சொல்ல,
குரு இறந்தவரின் உடல் மீது தீர்த்தம் தெளித்து, தூபம் காட்டுகிறார்)

குரு : செபிப்போமாக! ஆண்டவரே, உமது திருவுளப்படி வாழ்ந்து இறந்த உம் அடியார் தம் தீயச் செயல்களுக்குத் தண்டனை பெறாதபடி இரக்கம் காட்டியருளும். இவரது மெய்யான விசுவாசம் இவ்வுலகில் இவருக்கு விசுவாசிகளின் கூட்டத்தில் இடம் அளித்தது போல், உமது இரக்கம் இவரை மறுவுலகில் வானதூதரின் கூட்டத்திலும் சேர்க்க வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

குரு : ஆண்டவரே, நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்.

எல் : முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக.

(இறந்தவரின் உடலை கல்லறையில் வைக்கும் போது அல்லது குழியை மூடும் போது கீழ்வரும் பாடலைப் பாடலாம்)

### இறுதிப் பாடல்
மண்ணில் வாழ்ந்து செல்லும் மனிதா விண்ணில் தேவன் இன்பம் தருவார்
அன்று உன்னை அழைத்த தேவன் இன்று உன்னை அழைக்கின்றார்

இன்று உறவு நாளை பிரிவு மனிதன் வாழும் எட்டிலே
என்றும் அழியா உறவு உண்டு இறைவன் வாழும் வீட்டிலே

படைப்பின் இறைவன் படைப்பைக் காண கடைக்கண் ஒன்றைக் காட்டினான்
பார்த்த மனிதன் மயக்கம் கொண்டு படைத்தவனில் மூழ்கினான்

**பாடல் 2:**
நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே
முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக
இறைவா சீயோனில் உம்மைப் பாடுதல் ஏற்றதாம்
எருசலேமில் உமக்கு பொருத்தனை செலுத்தப்படும்
நீர் எம் மன்றாட்டைக் கேட்டருளும்
மாந்தர் அனைவரும் உம்மிடம் வருவார்.

**பாடல் 3:**
நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா நீர் இவர் பரிசாய் இருந்தருளும்

உன் மகன் இவர்க்கென உயிர் துறந்தார் தம் உதிரமும் உடலும் பலி ஈந்தார்
இறப்பில் அவருடன் ஒன்றித்த இவர் உயிர்ப்பிலும் இணைந்து மாட்சியுற

செபங்களும் புகழ்ச்சிப் பலிகளுமே யாம் செய்தோம் இறந்தோர் சாந்தியுற
எம் பலிப்பொருள் இதை ஏற்றருளும் எளியரெம் செபங்கள் கேட்டருளும்

**********

# இறந்தோருக்கான பாடல்கள்

**பாடல் 1:**
சென்று வா கிறிஸ்தவனே உலகை வென்றுவிட்டாய் நீ விசுவாசத்தால்!

உற்றார் உறவினர் நண்பரெல்லாம் சுற்றி நின்று வழியனுப்ப,
உற்ற துன்பத்தில் ஆறுதலாய், உதவும் திருச்சபை அருகிருக்க!

இறைவனின் புனிதரே துணை வருவீர்! தேவனின் தூதரே வந்தழைப்பீர்!
அடியார் ஆன்மா ஏற்றிடுவீர்! ஆண்டவர் திருமுன் சேர்த்திடுவீர்!

படைத்த தந்தை உனை ஏற்பார்! மீட்டத் திருமகன் உனைக் காப்பார்!
அர்ச்சித்த ஆவியும் உனைச் சூழ்வார்! அனைத்துப் புனிதரும் உனைச் சேர்வார்!

நித்திய அமைதியில் சேர்ந்திடுவாய் நீடித்த ஒளியில் வாழ்ந்திடுவாய்
ஆண்டவர் எமையும் அழைக்குங்கால் அவரோடுன்னையும் சந்திப்போம்

**பாடல் 2:**
கருணைத் தெய்வமே கண்பரும் ~ எங்கள் பாவங்களை நீர் பொருத்தருளும்

- உடலும் அறிவும் மனமும் ~ ஒன்று சேர்ந்து உம்மை எதிர்த்ததையா
- தேவ கட்டளை வழியை ~ மனம் பன்முறை அறிந்தே வெறுத்ததையா
- பாவச் சேற்றை நாளும் ~ எம் வாழ்வே கொண்டு நிறைந்ததையா
- பாதை தெளிவுறத் தெரிந்தும் ~ அதைப் பார்த்து நாங்கள் நடக்கவில்லை
- உண்மை விளக்கு எரிந்தும் ~ அதன் ஒளியின் அருகே வாழவில்லை
- இறைவன் அன்பை அறிந்தும் ~ அதை உணர்ந்த பின்னும் திருந்தவில்லை
- அன்பு செய்யும் இறைவா ~ உனை மறந்து சென்றதை எண்ணுகின்றோம்
- நீதி நிறையும் தலைவா ~ எம் பாவம் நினைந்தே கலங்குகின்ரோம்
- தூய வாழ்வின் நிறைவே ~ உன் மன்னிப்புத் தருவாய் உயிர் பெறுவோம்

**பாடல் 3:**
இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக ~ அவர் இறைவா உம்மிடம் வந்தடைக

நின் ஒளி அவர் மேல் ஒளிர்ந்திடுக புவி நிதம் அவர் நினைவில் நிலைத்திடுக
தீயவை யாவும் விலகிடுக ~ அவர் நிதம் உம் மகிழ்வில் நிலைத்திடுக

விண்ணகச் சீயோன் நகரினிலே நிதம் பண்ணால் உம் புகழ் அவர் இசைக்க
புனித வான தூதருடன் ~ உம்மை புகழ்ந்திடும் பேறு அவர் பெறுக

உலகில் அவர்கள் இறந்தாலும் ~ இறை உம்மில் என்றும் வாழ வேண்டும்
சாவு கதவினை அடைத்தாலும் ~ உம் சந்நிதி வாயில் திறக்க வேண்டும்.

**பாடல் 4:**
புகை மூட்டமும் பனிக் கூட்டமும் சில நாழிகையில் பறந்தோடிடும்
நாம் வாழ்கையும் சில காலமே ஓ நெஞ்சமே

மலை மீது பிறக்கின்ற நதிகள் கடலோடு உறவாடத் துடிக்கும்
கடல் மீது பறக்கின்ற அலைகள் கரையோடு உறவாட முடியும்
கடலானது கரையானதும் ~ என் இயேசுவே

ஒரு நூறு ஆண்டுகள் இன்று ஓர் ஆண்டில் இறந்தவர் உண்டு
எதிர் காலம் நம் கையில் இல்லை இறைவனே நிகழ்கால எல்லை
இறையோடு நாம் இணைந்தோடினால் ~ ஓ இன்பமே

**பாடல் 5:**
உத்தரிக்கும் தலத்தினிலே செய்த கொடுமையான பாவங்களால்
நித்தமும் வேதனையால் துடித்து சுத்தமும் ஆகும் வரை
அத்தனைப் பார்க்காது கொடுமை அடைந்திடும் ஆன்மாக்கள்
நித்திய கதி சேர நாமும் செபிப்போமே

ஒறுத்தல்கள் சுத்தமாய்ச் செய்துமே தினமும் ஓயாது வேண்டுவோம்!
திருப்பலி செய்துமே நன்கு வேண்டிடுவோம் மறவாது
வறுமையால் வாடிடும் ஏழைக்கு வழங்குவோம் தானங்கள்
அருமையுடன் ஆன்மாக்களுக்குக் கொடுத்து ஆண்டவரிடம் மன்றாடுவோம்

கருமம் பாவம் தோசம் நீங்கி மோட்ச கதியிலே சேரத் துணை நிற்போம்!
செபமும் செபமாலை செபித்துச் சிறப்பாக வேண்டுவோம்
உபரியாய் நாம் செய்யும் நல்ல உதவிகளை மறக்க மாட்டார்.
எப்பவும் நினைத்தவர் மறுபடி ஏழைகளுக்கு உதவிடுவார்.

இப்பொதும் எப்போதும் ஆன்மாக்களை நினைத்துமே செபித்திடுவோம்!
உத்தரிக்கும் ஆன்மாக்கள் உரிய தண்டனை முடிந்துமே
ஆத்மாவின் முகம் பார்த்து அக்களித்து உதவிடுவோம்.
உத்தமமாய் நாம் வாழ உன்னத வழிகாட்டி
நித்தமும் வேண்டுவோர் நினைவில் கொள்ளுவீர்!

**பாடல் 6:**
இறைவா இவரது திருப்பயணம் இனிதே அமைந்திட இறைஞ்சுகிறோம்!

பாஸ்காப் பயணம் இதுவே தான். கிறிஸ்தவர் செல்லும் வழி இது தான்.
இறப்பைக் கடந்து உயிர்ப்பிற்கு, இசைந்து செல்லும் வழி இது தான்.
அடிமைத் தலையை அறுத்தெரிந்து, ஆண்டவன் மக்கள் அன்றொரு நாள்,
உரிமை நாடு கடந்து சென்றார், உண்மை இங்கு நடப்பது தான்!

சிலுவை சுமந்த வழியினிலே, சீர்மிகு உயிர்ப்பும் பிறந்ததுவே!
சிலுவை பதித்த சுவடுகளில் சீடர் இருவரும் செல்கின்றார்!
துன்பத்தின் வழியாய் திருச்சபையும், தூரப் பயணம் போவது போல்,
பயணத்தின் முடிவில் இவ்வடியார் பரகதி சேர்ந்திட இறைஞ்சிடுவோம்!

விண்ணக விருந்து உண்டிடவே, விரைந்து செல்லும் இவ்வடியார்,
திருமகன் வந்து பார்க்கையிலே, திருமண உடையுடன் திகழ்ந்திடவே!
ஆண்டவர் அழைத்த நேரத்திலே, அணையா விளக்குடன் ஆயத்தமாய்,
உடனே செல்லும் ஊழியராம், உண்மையில் பேறுபெற்றவரே!

அந்நிய நாட்டின் எல்லைதனை, அடியார் இவரும் கடந்துவிட்டார்.
தாயகம் திரும்பும் பயணியிவர், தவறாது தன்வீடு சேர்ந்திடவே!
எனக்கு வாழ்வு கிறிஸ்துவே தான்! என்றும் அவரோடிருப்பதுதான்!
இழப்பு அனைத்தும் அவரின்றி இறப்பு ஆதலின் ஆதாயம்!

**பாடல் 7:**
இறைவா இறந்தவர்க்கமைதி தாரும்
மனமிரங்கி உன் திருவடிதனில் சேரும் ஓ...

வாழ்வென்னும் பயணம் முடிந்து விட ~ மறு
வாழ்வின்று இவர்க்கு தொடங்கிடட்டும் ~ 2
கல்லறையில் இவர் உடல் செல்ல ~ 2 ~ உம்
இல்லத்தில் ஆன்மா இடம் பெறட்டும்
இறைவா... இறைவா... இறைவா... இறைவா... ~ 2

உம் வழி உலகில் தினம் நடந்து என்றும்
உம் பணி செய்தவர் இவர் இறைவா
நன்று என் மகளே வா என்று ~ 2 ~ நீர்
நடத்திச் செல்வீர் உம் வீட்டினுக்கே
இறைவா... இறைவா... இறைவா... இறைவா... ~ 2

**பாடல் 8:**
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் மீது
மனமிரங்கி ஆண்டவரே இன்ப சாந்தி தாரும் ~2

விரிந்த திரு கைகால்கள் விலாவில் இருந்தோடும்
விலையில்லா உதிரத்தால் அவர்களை விண் சேரும் ~ 2

எரிகின்ற நெருப்பினிலே புழுப்போல வாடி
எள்ளளவும் சுகமின்றி ஆறுதலைத் தேடி

புரிந்த சிறு பாவங்களுக்குப் பரிகாரம் செய்து
புலம்பி அழும் அவர்களுக்கு அருள்மாரி பெய்து ~ 2

**பாடல் 9:**
முடிவில்லாத வாழ்வைத் தேடி வருகிறேன் இறைவா...
உன் முன்னிலையில் மண்டியிட்டுக் கிடக்கிறேன் இயேசய்யா
முடிவில்லாத வாழ்வைத் தேடி வருகிறேன்

நானே உயிர் தரும் ஊற்று என்ற வார்த்தையின் பொருள் என்னவோ? ~ 2
உம் ஊற்றில் பருகும் எனக்கென்றும்
இறப்பில்லையோ... இருளில்லையோ... தாகமில்லையோ...

நானே உயிர் தரும் உணவு என்ற வார்த்தையின் பொருள் என்னவோ? ~ 2
உம் உடலை உண்ணும் எனக்கென்றும்
பசியில்லையோ... துயரில்லையோ... துன்பமில்லையோ...

**பாடல் 10:**
சுவாமி பாதாளங்களினின்று உம்மை நோக்கி கூப்பிடுகின்றேன்
சுவாமி என் சத்தத்தை கேட்டருளும்

எனது விண்ணப்பத்தின் பேரோலியை
உமது செவி தந்து கேட்டருளும் (சுவாமி...)

ஆண்டவரே நீர் எங்கள் குறைகளை பாராட்டுவீராகில்
உமக்கு முன் நிலைநிற்க இயல்பவன் யார்? (சுவாமி...)

ஆனால் உம்மிடத்தில் மன்னிப்பு உள்ளதால்
பயபக்தியுடனே உம் பணிபுரிவோம் (சுவாமி...)

ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன் அவர் ஒளிகளை நம்பினேன் (சுவாமி...)

உதய காலத்தை எதிர்நோக்கும் சாமகாவலைவிட
என் ஆன்மா ஆவலாய் ஆண்டவரை எதிர்பார்க்கிறது (சுவாமி...)

உதய காலத்தை எதிர்நோக்கும் சாமகாவலைவிட
இஸ்ராயல் ஆண்டவரை எதிர்பார்பதாக (சுவாமி...)

ஏனெனில் அவர் தயை நிறைந்தவர் மீட்பும் அவரிடம் ஏராளாம் (சுவாமி...)

அக்கிரமங்கள் அனைத்திலுமிருந்து இஸ்ராயேலை அவரே மீட்டருள்வார் (சுவாமி...)

**பாடல் 11:**

இறைவா உமது அடியார் இவருக்கு இரங்கி அமைதி அளித்தருளும்
மண்ணக கோயிலில் ஏற்பது போல் விண்ணக கோயிலில் இடம் அருளும்

திரு நீராடி புனிதம் அடைந்து திரு அருட்சாதனம் பலவும் பெற்று
அழியா வாழ்வை பெற்ற தலத்தில் அழியும் உடலைச் சுமந்து வந்தோம்

நித்திய வாழ்வின் உணவை உண்டு நித்தம் உமது வார்த்தையைக் கேட்டு
இனி வரும் வாழ்வில் நம்பிக்கை தந்த இல்லத்தில் இவரைக் கொண்டு வந்தோம்

பாவப் பொறுத்தல் பலமுறை தந்து பரமன் அன்பை இவர்க்கு அருளிய
தலமாம் கோயில் நோக்கியே வந்தோம் தயவாய் இவர் பிழை பொறுத்தருள்வீர்

கிறிஸ்துவின் மறைவுடல் அங்கமிவரை திருச்சபை மக்கள் பரிவுடன் கொணர்ந்தோம்
என்றும் அழியா கிறிஸ்து உடல் போல் இன்றும் இவர் மகிமை பெறவே

வானவர் கூடி வரவேற்றிவரை ஆபிரகாமின் மடியில் வளர்த்தி
ஏழை லாசர் அடைந்த பேற்றை எம்மவர் இவரும் அடைந்திடவே

எரியும் தீபம் கரத்தில் ஏந்தி ஏனத்தில் எண்ணெய் நிறையத் தாங்கி
நினையா நேரம் வந்திடும் தலைவரை அணையா விளக்குடன் சந்திக்கச் செல்வோம்

**பாடல் 12:**

நிறைமிகு அமைதியில் சேர்ந்திடுவாய் நீடித்த ஒளியில் வாழ்ந்திடுவாய் ~ 2

இறைவனில் இறப்போர் பேறுபெற்றோர் ~ இனி இவருக்கு மீண்டும் உழைப்பில்லையே
ஆற்றிய நன்மைகள் பின்தொடர ~ இளைப்பாற்றியை அவர்கள் கண்டிடுவார்

சாவே உனது கொடுக்கெங்கே ~ எனச்சாற்றும் பாறைகள் அதிர்ந்திடுமே
உயிர்ப்பின் எக்காளம் ஒலித்தங்கே ~ இவ்வுலகோர் தம்மை எழுப்பிடுமே

விண்ணக விருந்தின் முன்சுவையே ~ இங்கு மண்ணிலே நுகர்ந்திட விரைந்திடுவோம்
எண்ணிலா புனிதர் கூட்டத்திலே ~ அங்கு கண்ணீரும் சாவும் மறைந்திடுமே

**பாடல் 13:**

வாழ்வோர் இறந்தோர் நலம்பெற இறைவா வாழ்த்தி வைத்தோம் காணிக்கையை

நிலத்தில் விழுந்த கோதுமை மணி நிறைந்த பலனைத் தந்திடவே ~ 2
மடிந்து மண்ணில் மறைந்தால் தான் மக்கள் பலரின் உணவாகும்

மண்ணில் புதைந்த இறை மகனும் மகிமை கொண்டே உயிர்த்து வந்தார்
இறந்த அவரின் அடியாரும் இனிதே மகிமை அடைந்திடுவார்

**பாடல் 14:**
சாகா வரம் தரும் உணவு ~ நல் தேவாமிர்த உணவு

பாலை நிலத்தில் அன்று பரமன் தந்தார் உணவு
போதிய உணவும் உண்டு போனார் மக்கள் மாண்டு

வானம் பொழிந்த உணவு வாழ்வு நல்கும் உணவு
இறைவன் அன்றோ உணவு இதனால் அங்கு நிறைவு

உடலே உண்மை உணவு உதிரம் உண்மை பானம்
அருந்தி அவரில் நிலைத்தால் அழியா உயிர்ப்பு உண்டு

ஆண்டவர் வருகையை நினைந்து அருந்தும் ஆயத்த விருந்து
போகும் வழியின் உணவு சேரும் வீட்டின் முன்சுவையே

இனி வரும் விருந்தில் நாமும் இறைவனை என்றும் புகழ்ந்து
இனிமேல் சாவே இல்லா இல்லம் வாழ்வோம் இனிது

**பாடல் 15:**
இறைவனின் புனிதர்களே துணையாய் நிர் வருவீர்
தேவனின் தூதர்களே எதிர்கொண்டு வருவீர் ~ 2

> இவர் ஆன்மாவை ஏற்றுக் கொண்டு
> உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள் ~ 2 (இறைவனின்...)

உம்மைத் தம்மிடம் அழைத்த இயேசுவே உம்மை ஏற்றுக் கொள்வாரே ~ 2
தூதர் உம்மை ஆபிரகாம் மடியில் கொண்டு சேர்ப்பாராக ~ 2 (இவர் ஆன்மாவை...)

நித்திய சாந்தியை ஆண்டவரே இன்று இவர்க்கு அருளுவீராக ~ 2
முடிவில்லாத மீட்பின் ஒளி இவர் மேல் ஒளிர்ந்திடுக ~ 2 (இவர் ஆன்மாவை...)

**பாடல் 16:**
கல்லறை மேட்டினில் மனுக்குலம் கண்ணீர் சிந்தும் காட்சியினை
கருணைக் கண்ணால் நோக்கினார் கவலையைக் கர்த்தர் போக்கினார்

அன்று கல்லறை அருகினில் அவரும் கண்ணீர் விட்டழுதார்
துன்புறு மனிதர் கண்ணீரை துடைக்க அன்றே முன்வந்தார்

நானே உயிரும் உயிர்ப்பாவேன் நம்புவோர் இதனை இறந்திடார்
என்றே உரைத்து இறந்தவனை எழுப்பி உண்மை அறிவித்தார்

மூன்று நாட்கள் கல்லறையை மூடிக் கிடந்த இருளகற்றி
முன்பே உரைத்த வாக்கின்படி மூவுலகாள்பரன் உயிர்த்து வந்தார்

**பாடல் 17:**
முன்னாள் வனத்தில் நீர் மன்னா தந்தீர் இன்னாள் எம் அன்னமாய் உம்மை ஈந்தீர்
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

ஓர் திரை மேகத்தில் ஜோதி மறைத்~தோதினீர் கற்பனை மோயீசற்கே
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

நாதா உம் ஜோதியை மா அப்பத்தே ஏதுக்காய் மறைத்தீர் மீண்டும் இப்போ
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

தாபோர் மலையில் உம் நேர் உருவம் பார்க்கொண்ணா துள்ளியோ நீர் ஒளித்தீர்
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

எம்பால் நீர் காட்டும் மா அன்பிற்கீடாய் எம் பணி ஆற்றினோம் அன்பிலார் யாம்
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

பூங்காவில் நீர் மிக ஏங்கி வாட பாங்காய் ஓர் ஆறுதல் தந்தோமில்லை
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

ஓங்கும் சிலுவையில் ஏங்கும் போதும் ஆங்கோர் ஆறுதல் யாம் ஆற்றவில்லை
நேசாதி நேசனே! ஆசார தேவனே! இராஜாதி இராஜனே! நாளும் ஸ்தோத்திரம்!

**பாடல் 18:**
தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோருக்கு
ஓயாத் தஞ்சமும் ஆதரவும் நீயே

தீயில் விழுந்து வெந்து சோர்ந்து ~ உந்தன்
திருத்தயை கேட்க நீயோ அறிந்து
தூய வளன் கதியினில் சேர்ந்து ~ உன்னை
துதித்திட அருள் செய்வாய் புரிந்து

உலகம் பசாசை தினம் வென்றார் ~ தங்கள்
உடலுக்கும் ஓயாதெதிர் நின்றார்
காலமெல்லாம் கடந்த பின்னும் ~ சொற்பக்
கரையினால் துறை சேரார் இன்னும்

**பாடல் 19:**

மண்ணில் வாழ்ந்து செல்லும் மனிதா ~ பக்கம் 24

**பாடல் 20:**

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ~ பக்கம் 24

**பாடல் 21:**

நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா ~ பக்கம் 24

**பாடல் 22:**

அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு
எந்தத் துன்பம் வந்தாலும் என் அன்பு உன்னோடு ~ 2

குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
எந்த நிலை தான் ஆனாலும் எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் ~ 2

அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும் உன்னை நானோ மறவேனே
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் ~ 2

**பாடல் 23:**

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய் தன் கரத்தை நீட்டி அன்பாய் அழைக்கிறார் ~ 2

இறைவனின் குலமே இயேசுவின் உள்ளமே ~ 2
இதய அமைதி இனிதே அடைய
இயேசு அழைக்கிறார் ~ 2

கவலை மிகுந்தோரே கலங்கித் தவிப்போரே ~ 2
கவலை நீக்கிக் கலக்கம் போக்கக்
கடவுள் அழைக்கிறார் ~ 2

உலகின் மனிதரே உன்னையே எண்ணிப் பார் ~ 2
உலகம் அனைத்தும் உனக்கானாலும்
உனக்கு என்ன லாபம்? ~ 2

**பாடல் 24:**
இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ
மறந்திடுவாயோ மனித பண்பிருந்தால் இயேசுவின் அன்பை...
மறந்திடாதிருக்க நீ சிலுவையிலே அவர் ~ 2
மரித்து தொங்கிடும் காட்சி மனதில் நில்லாதோ ~ இயேசுவின்

அளவில்லா அன்பு அதிசய அன்பு
ஆழம் அகலம் நீளம் எல்லை காணா அன்பு
களங்கமில்லா அன்பு கருணை சேர் அன்பு ~ 2
கல்வாரி மலை கண்ணீர் சொல்லிடும் அன்பு ~ இயேசுவின்

அலை கடலை விடப் பரந்தப் பேரன்பு
அன்னைமார் அன்பெல்லாம் திரையிடும் அன்பு
மலை போல் எழுந்தென்னை வளைத்திடும் அன்பு ~ 2
சிலையெனப் பிரம்மையில் நிறுத்திடும் அன்பு ~ இயேசுவின்

எனக்காக மனுவுருத் தரித்த நல்லன்பு
எனக்காகத் தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காகப் பாடுகள் ஏற்றப் பேரன்பு ~ 2
எனக்காக உயிரையேத் தந்த தேவனன்பு ~ இயேசுவின்

**பாடல் 25:**
இயேசுவின் இருதயமே எங்கும் எரிந்திடும் அருள் மயமே
உந்தன் ஆசியும் அருளும் சேர்த்து வந்தால்
எங்கள் ஆனந்தம் நிலைபெறுமே ~ 2

இறைவனுக்கிதயம் உண்டு ~ அந்த
இதயத்தில் இரக்கம் உண்டு ~ 2 ~ என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால்
இங்கு அனைவர்க்கும் வாழ்வு உண்டு ~ 2

கடவுளின் கருணை உண்டு ~ அந்தக்
கருணைக்கும் உருவம் உண்டு ~ 2
அவர் உருவத்தில் உதித்தேழும் உயிரதனால்
எங்கள் உள்ளத்தில் உவகை உண்டு ~ 2

இரவினில் தீபம் உண்டு ~ இந்த
இல்லத்தில் ஒளியும் உண்டு ~ 2
எங்கள் இருதய அன்பர் விழித்திருந்தால்
எந்தத் துயரிலும் காவல் உண்டு ~ 2

பாவிக்குப் பொறுத்தல் உண்டு ~ அந்தப்
பரலோக வாழ்வும் உண்டு ~ 2
நாங்கள் கூவிடும் குரலைக் கேட்பதற்கு
இந்தக் கோவிலில் தெய்வம் உண்டு ~ 2

**பாடல் 26:**
என் ஆயனாய் இறைவன் இருக்கின்ற போது
என் வாழ்விலே குறைகள் என்பது ஏது?

என்னை அவர் பசும்புல் பூமியிலே எந்நேரமும் நடத்திடும் போதினிலே ~ 2
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம் ஆஹா என்றென்றும் இன்பமல்லவா ~ 2

என்னோடவர் நடந்திடும் போதினிலே எங்கே இருள் படர்ந்திடும் பாதையிலே ~ 2
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி ஆஹா எங்கெங்கும் ஒளியல்லவா ~ 2

**பாடல் 27:**
எதை நான் தருவேன் இறைவா ~ உன் இதயத்தின் அன்பிற்கீடாக
எதை நான் தருவேன் இறைவா ~ 2

குறைநான் செய்தேன் இறைவா ~ பாவக் குழியில் விழுந்தேன் இறைவா ~ 2
கறையாம் பாவத்தை நீக்கிடவே ~ 2
நீ கல்வாரி மலையில் இறந்தாயோ… இறந்தாயோ…

பாவம் என்றொரு விசத்தால் ~ நான் பாதகம் செய்தேன் இறைவா ~ 2
தேவனே உம் திருப்பாடுகளால் ~ 2
எனைத் தேற்றிடவே நீ இறந்தாயோ… இறந்தாயோ…

**பாடல் 28:**
தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ
தனது பிள்ளை அவள் மறப்பாளோ
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயையுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே

குன்று கூட அசைந்து போகலாம் குகைகள் கூட பெயர்ந்து போகலாம் ~ 2
அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே அசைவதில்லை பெயர்வதில்லையே ~ 2

தீ நடுவே நீ நடந்தாலும் ஆழ்கடலைத் தான் கடந்தாலும் ~ 2
தீமை ஏதும் நிகழ்வதில்லையே தீதின்றியே காத்திடுவேன் நான் ~ 2

**பாடல் 29:**

மாதாவே சரணம் உந்தன் பாதாரம் புவிக்காதாரம் ~ கன்னி மாதாவே சரணம்
மாபாவம் எம்மை மேவாமல் காப்பாயே அருள் ஈவாயே ~ கன்னி மாதாவே சரணம்

மாசில்லா மனமும் இயேசுவின் உள்ளமும்
மாந்தரின் தவறால் நோயுறக் கண்டோம் ~ 2
செபம் செய்வோம் தினம் செபமாலை சொல்வோம் ~ 2
பாவத்திற்காகப் பரிகாரம் புரிவோம் ~ 2

நானிலத்தில் சமாதானமே நிலவ
நானிலம் எல்லாம் துன்பங்கள் ஒழிய ~ 2
உயிர் உடல் அனைத்துமே உவப்புடன் அளிப்போம் ~ 2
உம் இருதயத்தில் இன்றெம்மை வைப்போம் ~ 2

**பாடல் 30:**

மாதாவே துணை நீரே உம்மை வாழ்த்திப் போற்ற வரம் தாரும்
ஈதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா ஏற்றன்பாக எமைப்பாரும்

வானோர் தம் அரசே தாயே எம் மன்றாட்டை தயவாய்க் கேளும்
ஈனோர் என்றெம்மை நீர் தள்ளாமல் எக்காலத்துமே தற்காரும்

ஒன்றே கேட்டிடுவோம் தாயேயாம் ஓர் சாவான பாவந்தானும்
என்றேனும் செய்திடாமல் காத்து எம்மை சுத்தர்களாய்ப் பேணும்

**பாடல் 31:**

வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே
சிலுவையடியினிலே சிந்தை நொந்தழுதாயோ

பன்னிரு வயதில் ஆலயத்தில் ~ அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை ~ 2
கரங்களை விரித்தே கள்வனைப் போல் ~ 2
கழுமரத்தினில் கண்டதினால்

கண்ணீரைச் சிந்திய மனிதருக்கு ~ அருள்
செய்திட்டத் திருமகனை ~ 2
மண்ணவர்க்காகத் தன்னுயிரை ~ 2
இன்று மாய்த்திடக் கண்டதினால்

**பாடல் 32:**
யாரிடம் செல்வோம் இறைவா வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன யாரிடம் செல்வோம் இறவைா
இறைவா... இறைவா... இறைவா... இறைவா...

அலைமோதும் உலகினிலே ஆறுதல் நீ தரவேண்டும் ~ 2
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ, ஆதரித்தே அரவணைப்பாய் ~ 2

மனதினிலே போராட்டம் மனிதனையே வாட்டுதய்யா ~ 2
குணமதிலே மாறாட்டம், குவலயம் தான் இணைவதெப்போ ~ 2

வேரறுந்த மரங்களிலே விளைந்திருக்கும் மலர்களைப் போல் ~ 2
உலகிருக்கும் நிலை கண்டு, உனது மனம் இரங்காதோ ~ 2

**பாடல் 33:**
வாடும் உள்ளங்களே வாரீர் இறைவனிடம்
தேடும் உள்ள அமைதி தேவன் தந்திடுவார்

வருந்தி சுமை சுமப்போர் வாரீர் இறைப்பாற
விரும்பி அழைக்கின்றார் விரைந்தே நீர் வருவீர்
தமது உருவாக உன்னைப் படைத்த அவர்
தவிக்க விடுவாரோ தரணியில் வாடி விழ

விண்ணில் பறந்துயரும் பறவை இனங்களையும்
மண்ணில் வாடி விழும் வண்ணப் பூக்களையும்
காட்டில் வளர்ந்துயரும் மரம் செடிக் கொடிகளையும்
ஊட்டி உணவளித்து உயிர் வாழ்ந்திடச் செய்கையிலே

**பாடல் 34:**
அஞ்சாதே ஆண்டவர் துணையிருக்க
நெஞ்சோடு நித்தம் அவர் நினைவிருக்க ~ 2
உன் தாயின் உதிரத்தால் உனைத் தெரிந்தார்
உன் வாழ்வில் உறவாய் உன்னில் இணைந்தார் ~ 2

தீயின் நடுவே தீமை இல்லை திக்கற்ற நிலையில் துயரம் இல்லை
தோல்வி நிலையில் துவண்டு வாழும் துன்பம் இனியும் தொடர்ந்திடாது
காக்கும் தெய்வம் காலமெல்லாம் ~ 2
கரத்தில் தாங்கிடுவார் அன்பின் கரத்தில் தாங்கிடுவார்

தூர தேசம் வாழ்க்கைப் பயணம் தேவன் நேசம் உன்னைத் தொடரும்
பாவம் யாவும் பறந்து போகும் பரமன் அன்பில் பனியைப் போல
வாழும் காலம் முழுதும் உன்னில் ~ 2
வசந்தம் வீசிடுமே அன்பின் வசந்தம் வீசிடுமே

**பாடல் 35:**
அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம் ~ 2
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் ~ 2 ~ நான்
மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம் ~ 2
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம் ~ 2

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீயே நிரந்தரம் ~ 2
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம் ~ 2

செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்னும் நிஜமான நீயே நிரந்தரம் ~ அதன்
விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம் ~ 2
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம் ~ 2

**பாடல் 36:**
சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் எல்லோரும் வாருங்கள்
என்னிடம் எல்லோரும் வாருங்கள்

உங்களை நான் இளைப்பாற்றுவேன்
உங்களை நான் காப்பாற்றுவேன்
உங்களை நான் தேற்றிடுவேன்
உங்களை நான் ஏற்றிடுவேன்

உங்களை நான் நடத்திச் செல்வேன்
உங்களை நான் அன்பு செய்வேன்
உங்களை நான் அரவணைப்பேன்
உங்களை நான் வாழச் செய்வேன்

உங்களை நான் வளரச் செய்வேன்
உங்களை நான் ஒளிரச் செய்வேன்
உங்களை நான் மலரச் செய்வேன்
உங்களை நான் மிளிரச் செய்வேன்

**பாடல் 37:**

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றிக் கொடுக்கின்றார்

இருகரம் விரித்தவராய் இதயத்தைத் திறந்தவராய் ~ 2
இறைவன் இருக்கின்றார் இனியும் தாமதமேன்

வரும் வழி பார்த்தவராய் வரம் மழை பொழிந்தவராய் ~ 2
வந்தவர் இருக்கின்றார் விரைந்திட தாமதமேன்

துயரினில் ஆறுதலாய் நோயினில் மருத்துவராய்
அடிமையின் விடுதலையாய் ஆண்டவர் இருக்கின்றார் ~ 2

**பாடல் 38:**

தயை செய்வாய் நாதா என் பாவங்களை நீக்கி ~ 2

அன்புடனே ஏழை என் மேல் இரக்கம் வையும்
அனுதபித்து என் பிழையை அகற்றுமையா
பாவமதை நீக்கி என்னைப் பனி போலாக்கும்
தோசமெல்லாம் தீர்த்து என்னைத் தூய்மையாக்கும்

என் குற்றம் நான் அறிவேன் வெள்ளிடை மலை போல்
தீவினையை மறவாதென் மனது என்றும் ~ உம்
புனிதத்தைப் போக்கி நான் பாவியானேன் ~ நீர்
தீமையென்று கருதுவதைத் துணிந்து செய்தேன்

உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகின்றீர் ~ என்
ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவை ஊட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்
பனி வெண்மைக்கு உயர்வாகப் புனிதமாவேன்

**********